**IN THE COURT OF SUB COURT, USILAMPATTI**

**O.S. No. 87/ 2025**

**Dated: 11.08.2026**

Name : கவிதா (PW1)

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :-</u>**

சத்தியமாக சொல்கிறேன். பிரதிவாதி எனக்கு அவர் பால் வியாபாரம் செய்வதால் கடந்த 7, 8 வருடங்களாக எனக்கு பழக்கம். பிரதிவாதி விசேசம் வைக்க இருப்பதாக சொல்லி கடன் வாங்கினார் . அ.சா.ஆ.1 புரோநோட்டில் பிரதிவாதி விசேசம் வைப்பதற்காக கடன் வாங்கியதாக எழுதப்பட்டுள்ளதாம் என்றால் ஆமாம் . என்னிடம் காட்டப்படும் அ .சா.ஆ.1 புரோநோட்டில் விசேசம் வைப்பதற்கு கடன் வாங்கியதாக எழுதப்படவில்லை என்றால் ஆமாம் . 28.01.2024 ல் விசேசம் வைக்க இருப்பதாக பிரதிவாதி என்னிடம் சொன்னார் . நான் 500 ரூபாய் கட்டுகளாக 4 கட்டுகள் கடனாக கொடுத்தேன். பொதுவாக ரூபாய் 20 ஆயிரத்துக்கு மேல் பணம் பரிவத்தனை செய்யப்பட்டால் கசோலை மூலமாக தான் செய்யப்பட வேண்டும் என்றால் எனக்கு தெரியாது . நான் பிரதிவாதிக்கு நான் கையிருப்பில் வைத்திருந்த தொகையில் இருந்து கடன் கொடுத்தேன் . பிரதிவாதி என்னிடம் கடன் வாங்கும்போது 2 கையொப்பம் இட்டு அவருடைய செல் போன் நம்பரை எழுதிக்கொடுத்தார். 1 வது சாட்சியாக எனது பக்கத்து வீட்டுக்காரர் திருமதி.கனகபாண்டீஸ்வரி கையொப்பம் செய்தார் . திருமதி.கனகபாண்டீஸ்வரி ஆங்கிலத்தில் சாட்சி கையெழுத்து இட்டார் . புரோநோட்டை பரிமளாதேவி எழுதி கையொப்பம் இட்டார் . புரோநோட்டு எழுதப்பட்ட 18.12.2023 அன்றே பிரதிவாதி

கடன் தொகை பெற்றார் . சாட்சி 2 நபர்களையும் நான் தான் அழைத்தேன் . நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் பிரதிவாதிக்கு நான் எவ்வித கடன்தொகையும் கொடுக்கவில்லை என்றாலும் எனக்கும் பிரதிவாதிக்கும் எந்தவகையிலும் பழக்கம் இல்லை என்றாலும் சரியில்லை . என் கணவர் முருகேசனுக்கும் பிரதிவாதிக்கும் தான் பழக்கம் என்றால் எனக்கும் என் கணவருக்கும் பழக்கம் . 10.10.2020 ம் தேதி பிரதிவாதி , என் கணவரிடம் ரூ .50 ஆயிரம் மாதம் 3%வட்டிக்கு கடன் வாங்கினார் அப்பொழுது அதற்காக பிரதிவாதி கையொப்பம் இட்டுகொடுத்த பூர்த்தி செய்யப்படாத புரோநோட்டை தவறாக அதிக தொகையை பூர்த்தி செய்து பிரதிவாதிக்கு நான் கடன் கொடுத்தது போல் உண்மைக்கு மாறாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் பிரதிவாதி எனக்கு எந்த கடன் தொகையும் தர அவசியம் இல்லை என்றாலும் சரியல்ல . பிரதிவாதி என் கணவரிடன் கடனாக பெற்ற ரூ .50 ஆயிரத்தை 07.08.2023 ம் தேதியில் வட்டியும் முதலுமாக முழுவதுமாக செலுத்தி தீர்த்து விட்டார் என்றாலும் அந்த சமயத்தில் பிரதிவாதி எழுதிக்கொடுத்த புரோநோட்டை என் கணவர் பிரதிவாதிக்கு திருப்பி தரவில்லை என்றாலும் அவ்வாறு புரோநோட்டை திருப்பி தராததால் என் வீட்டிற்கு பலமுறை வந்து என் கணவரிடம் திருப்பி தர கேட்டு இருவருக்கும் தகராறு ஏற்பட்டு உசிலம்பட்டி தாலுகா காவல்நிலையத்தில் 05.09.2024 ல் பிரதிவாதி எனது கணவர் தன்னை சாதியை சொல்லி திட்டியதாக புகார் கொடுக்கப்பட்டு அதன் அடிப்படையில் என் கணவரும் பிரதிவாதியும காவல் நிலையத்தில் ஆஜர் ஆனார்கள் என்றாலும் சரியல்ல. அவ்வாறு காவல் நிலையத்தில் ஆஜர் ஆன போது என் கணவர் பிரதிவாதியின் புரோநோட்டை திருப்பி கொடுத்து

விடுவதாகவும் பிரதிவாதியும் பணம் எதுவும் கேட்ட மாட்டேன் என்று எழுதிக்கொடுத்து சமரசம் ஆகினார்கள் என்றால் சரியல்ல . அந்த பிரச்சனையை மனதில் வைத்துக்கொண்டு என் கணவருக்கு பிரதிவாதி கையொப்பம் இட்டுகொடுத்த பூர்த்தி செய்யப்படாத புரோநோட்டை கூடுதல் தொகைக்கு பிரதிவாதியை பழிவாங்கும் நோக்கில் உண்மைக்கு மாறாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the witness and admitted and signed by the witness to be correct.

RENGANATHAN BARATHIRAJA

Digitally signed by RENGANATHAN BARATHIRAJA
Date: 2026.08.11 12:00:25 +0530

Sub Judge,
Usilampatti.